**<u>நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி.எண்.83/2017</u>**

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.5 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.அலமேலு, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சிவக்குமார் | வயது | 47 |
| த.பெ.(அ)க.பெ. | முனியப்பன் | தொழில் | அரசு மருத்துவர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | வாணியம்பாடி | சமயம் | |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

**<u>முதல் விசாரணை :</u> எதிரிகள் ஆஜர்**

நான் தற்போது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமுறை மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 21.01.2017 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுமார் 32 வயதுடைய சகுந்திரன் என்பவரை அவருடைய அண்ணன் பிரபாகரன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்துவந்தார். அவரை விசாரித்ததில் 21.01.2017 அன்று மாலை 6.00 மணியளவில் தனக்கு தெரிந்த மூன்று பெண் நபர்கள் மற்றும் ஒரு ஆண் நபர் கொம்பால் தன்னை தாக்கியதாக கூறினார். அவரை விசாரித்ததில் அவருக்கு இடது கையில் வலி மற்றும் வீக்கம் இருப்பதாக கூறினார். அவரை பரிசோதித்ததில் இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்த காரணத்தினால் அவரை உள் நோயாளியாக அனுமதித்து அவருடைய இடது கையில் இடது பக்கத்தில் உள்ள எலும்பின் கீழ் பகுதியில் முறிவு ஏற்பட்டிருந்தது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். **காயச்சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–</u>**

ஒரு நபர் தாறுமாறாக வேகமாக சென்று கீழே விழுந்தாலோ அல்லது மரத்தில் முட்டினாலோ மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை–** இல்லை

சாட்சியின் கையொப்பம்